RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI


தமிழால் வெல்வோம்

DAILY EVENING மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 119 | மே.5, 2025 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5



## “நீங்கள் விரும்புவது நிச்சயமாக நடக்கும்” பஹல்காம் தாக்குதல் விவகாரத்தில் ராஜ்நாத் சிங் உறுதி!

டெல்லி, மே.5-

பிரதமர் மோடியின் தலைமையின் கீழ், நீங்கள் விரும்புவது நிச்சயமாக நடக்கும் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்க விரும்புகிறேன் என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர் கூறியதாவது: “நமது நாட்டைத் தாக்கத் துணிபவர்களுக்கு தகுந்த பதிலடி கொடுப்பது எனது பொறுப்பு. பிரதமர் நரேந்திர மோடியின் பணி தர்மம் மற்றும் விடாமுயற்சியை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். பிரதமர் மோடியின் தலைமையின் கீழ், நீங்கள் விரும்புவது நிச்சயமாக நடக்கும் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்க விரும்புகிறேன்.

இந்த சம்பவத்தை நிகழ்த்தியவர்களை மட்டுமல்ல, திரைக்குப் பின்னால் அமர்ந்து இந்திய மண்ணில் இதுபோன்ற கொடூரமான செயல்களைச் செய்ய சதித் திட்டம் தீட்டியவர்களையும் நாங்கள் விடமாட்டோம். பாதுகாப்பு அமைச்சராக, வீரர்களுடன் இணைந்து பணியாற்றுவதும், நாட்டின் எல்லைகளைப் பாதுகாப்பதை உறுதி செய்வதும் எனது பொறுப்பு ஆகும்” இவ்வாறு ராஜ் நாத் சிங் தெரிவித்தார்.

முன்னதாக நேற்று (மே 4) விமானப்படைத் தளபதி ஏர்மார்ஷல் அமர் பிரீத் சிங், பிரதமர் மோடியை அவரது இல்லத்தில் இன்று சந்தித்து ஆலோசனை நடத்தினார். நேற்று (சனிக்கிழமை) பிரதமர் மோடியை கடற்படையின் தலைமை அட்மிரல் தினேஷ் கே.திரிபாதி சந்தித்தார்.

# இந்தியா பாகிஸ்தான் பதற்றத்துக்கு இடையே விமானப்படை தளபதியுடன் பிரதமர் மோடி ஆலோசனை

புதுடெல்லி: மே.5-

இந்தியா பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் நிலவும் நிலையில், விமானப்படை தளபதி ஏர் சீஃப் மார்ஷல் ஏ.பி.சிங்கை பிரதமர் மோடி நேற்று தனியாக சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

ஜம்மு காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் பைசரன் பள்ளத்தாக்கு பகுதியில் சுற்றுலாப் பயணிகள் மீது பாகிஸ்தான் தீவிரவாதிகள் கடந்த 22ம் தேதி தாக்குதல் நடத்தி 26 பேரை சுட்டுக் கொன்றனர். இதற்கு காரணமானவர்கள் மீது கற்பனைக்கும் எட்டாத வகையில் பதிலடி கொடுக்கப்படும் என பிரதமர் மோடி கூறினார். சிந்து நதி நீர் பங்கீடு ரத்து செய்யப்பட்டது. வாகா எல்லையை மூடவும், பாகிஸ்தானியர் வெளியேறவும் உத்தரவிடப்பட்டது.

பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், முப்படை தளபதிகள், பாதுகாப்பு படை தலைமை தளபதி ஆகியோருடன் பிரதமர் மோடி கடந்த வாரம் ஆலோசனை நடத்தினார். இதில் பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு பதிலடி



கொடுக்கும் நடவடிக்கையில் முப்படைகளுக்கும் முழு சுதந்திரம் அளித்தார். இதையடுத்து அடுத்த 36 மணி நேரத்துக்குள் பாகிஸ்தான் மீது இந்தியா தாக்குதல் நடத்தும் என உளவுத்தகவல் கிடைத்துள்ளதாக பாகிஸ்தான் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அத்தா வுல்லா தரார் கூறினார்.

சிந்து போர் பயிற்சி என்ற பெயரில் பாகிஸ்தான் ராணுவம் 450 கி.மீ சென்று தாக்கும் அப்தலி என்ற ஏவுகணையை சோதனை செய்து பதற்றத்தை அதிகரித்தது. இந்நிலையில் இந்திய கடற்படை தளபதி அட்மிரல் தினேஷ் கே திரிபாதி, பிரதமர் மோடியை நேற்று முன்தினம் தனியாக சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

இந்நிலையில் நேற்று விமானப்படை தளபதி ஏர் சீஃப் மார்ஷல் ஏ.பி.சிங்கை பிரதமர் மோடி நேற்று தனியாக சந்தித்து ஆலோசனை நடத்தினார். இந்த சந்திப்புகளின் விவரங்கள் வெளியிடப்படவில்லை. இந்தியா பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் நிலவும் நிலையில் கடற்படை தளபதி, விமானப்படை தளபதி ஆகியோரை பிரதமர் தனித்தனியே சந்தித்து ஆலோசனை நடத்தியது முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

தாக்குதல் நிச்சயம்: 2016ல் உரி பகுதியில் நடந்த தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தான் எல்லைக்குள் ‘சர்ஜிக்கல் ஸ்டிரைக்’ நடத்தி தீவிரவாதமுகாம்களை இந்தியா அழித்தது. 2019ல் புல்வாமா தாக்குதலுக்கு பதிலடி கொடுக்க பாகிஸ்தானின் பாலகோட்டில் உள்ள தீவிரவாத முகாம்கள் மீது இந்தியாவின் மிராஜ் 2000 ரக போர் விமானங்கள் குண்டு வீசின. இதற்கிடையே டெல்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், ‘‘பிரதமர்மோடியின் தலைமையின் கீழ், நீங்கள் விரும்புவது நிச்சயம் நடைபெறும் என நான் உங்களுக்கு உறுதி அளிக்க விரும்புகிறேன். பஹல்காம் தாக்குதலுக்காக, நமது எதிரிகளுக்கு நிச்சயம் தக்க பதிலடி கொடுக்கப்படும்’’ என்றார்.

பாகிஸ்தான் ஆயுதங்கள் 4 நாளில் தீர்ந்துவிடும்: பாகிஸ்தான் சமீபத்தில் உக்ரைனுடன் ஆயுத ஒப்பந்தம் செய்தது. இதில் எம்ஜிஎஸ் பீரங்கி வாகனங்கள், எம்109 மற்றும் பிஎம்21 பீரங்கிகளில் பயன்படுத்தப்படும் 155 எம்எம் மற்றும் 122 எம்.எம் ரக குண்டுகள் ஏற்றுமதி செய்யப்பட்டதால், பாகிஸ்தானில் பீரங்கிகள் மற்றும் குண்டுகள் கையிருப்பு வெகுவாக குறைந்தது. இத்தகவலை கடந்த 2ம் தேதி நடைபெற்ற பாகிஸ்தான் ராணுவ கமாண்டர்கள் மாநாட்டில் உயர் அதிகாரிகள் சுட்டிக்காட்டி கவலை தெரிவித்தனர்.

இந்தியா பாகிஸ்தான் இடையே தீவிர போர் ஏற்பட்டால், பாகிஸ்தானிடம் இருக்கும் பீரங்கி குண்டுகள் மற்றும் வெடிமருந்து பொருட்கள் 4 நாட்களில் தீர்ந்துவிடும் நிலை உள்ளது. வெடிமருந்து தொழிற்சாலைகளில் உள்ள உற்பத்தி இயந்திரங்கள் மிகவும் பழமையானவை. பாகிஸ்தான் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்ததால் வெடிமருந்து தொழிற்சாலைகளை நவீனப்படுத்தவில்லை. அதனால் இங்கு உடனடியாக வெடிமருந்து பொருட்களை அதிகளவில் தயாரிப்பது சிரமம். பாகிஸ்தான் ராணுவம் பீரங்கி படையைத்தான் அதிகளவில் சார்ந்துள்ளது. அப்படைக்குத் தேவையான தளவாடங்கள் குறைவாக இருப்பது, பாகிஸ்தான் ராணுவத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# “எடப்பாடி பழனிசாமியின் அரசியல் அத்தியாயம் 2026ல் முடிவது உறுதி” ஆர்.எஸ்.பாரதி

சென்னை: மே.5-

பாரதி வெளியிட்டுள்ள அறிக்கையில் திமுகதான் காங்கிரஸ் மிரட்டலுக்குப் பணிந்தது. அதிமுக ஞ் பாஜக கூட்டணி மகிழ்ச்சியோடு அமைந்திருக்கிறது எனப் பேசியிருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி.

2004 முதல் 2014 வரை காங்கிரஸ் கூட்டணியில் அங்கம் வகித்தபோது தமிழ்நாட்டுக்கு திமுக கொண்டு வந்த திட்டங்கள் ஏராளம். பாஜகவுக்கு சேவை செய்யவே நேரம் இல்லாத பழனிசாமிக்கு, திமுக கொண்டு வந்த திட்டங்கள் எல்லாம் எப்படி நினைவுக்கு வரும்?

தமிழ் செம்மொழி பிரகடனம், மிகப் பெரிய போக்குவரத்து மேம்பாலங்கள், சேலத்தில் புதிய ரயில்வே மண்டலம், தாம்பரத்தில் தேசிய சித்த மருத்துவ ஆய்வு மையம், சேலம் அரசினர் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவக் கல்லூரியாக மேம்பாடு, திருவாரூரில் மத்தியப் பல்கலைக் கழகம், கடல்சார் தேசியப் பல்கலைக் கழகம், இந்தியாவிலேயே முதல் முறையாக வளர்ந்த நாடுகளுக்கு இணையான 3 ஜி தகவல் தொழில் நுட்பத் திட்டம், 50 காசு செலவில் இந்தியா முழுவதும் தொலைப்பேசியில் பேசும் வசதி, நெசவாளர் சமுதாயத்தினர் நலனுக்காக சென்வாட் வரி நீக்கம், பொடா சட்டம் ரத்து என பத்தாண்டுக் காலத்தில் தமிழகத்துக்கு மட்டுமல்ல, இந்தியா முழுமைக்கும் பல திட்டங்களை திமுக கொண்டு வந்தது.

ரூ.2,427 கோடி செலவில் சேது சமுத்திரத் திட்டம் கொண்டு வரப்பட்டுப் பாதி பணிகள் முடிந்த நிலையில் மோடி அரசு கிடப்பில் போட்டது. ரூ.1,650 கோடி செலவில் சென்னை துறைமுகம் மதுரவாயல் இடையே பறக்கும் சாலைத் திட்டம் தொடங்கப்பட்டது. ஜெயலலிதா ஆட்சியில் முடக்கப்பட்ட அந்தத் திட்டத்தை மு.க. ஸ்டாலின் அரசு அமைந்த பிறகு புதுவடிவத்தை உருவாக்கி நிறைவேற்ற முயற்சிகள் எடுத்து பணிகள் நடந்து வருகின்றன.

மன்மோகன் சிங் ஆட்சிக்கு முன்பு வி.பி.சிங் ஆட்சியில் திமுக அங்கம் வகித்த போது கருணாநிதி வலியுறுத்தியதால் மண்டல் பரிந்துரை ஏற்கப்பட்டு, மத்திய அரசின் வேலை வாய்ப்புகளில் 27 சதவீத இட ஒதுக்கீடு கிடைத்தது. காவிரி நதி நீர்ப் பிரச்சினைக்கு நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. சென்னை விமான நிலையத்தில் பன்னாட்டு முனையத்திற்கு அண்ணா பெயரும் உள்நாட்டு முனையத்திற்குக் காமராஜர் பெயரும் சூட்டப்பட்டன.

பழனிசாமி பாஜகவுடன் கூட்டணியில் இருந்து என்ன செய்தார்? எத்தனை திட்டங்களைக் கொண்டு வந்தார்? என பட்டியல் போட முடியுமா? மாறாகத் தமிழ்நாட்டுக்கு துரோகங்களைத்தான் பழனிசாமி செய்தார்.

ராஜ்பவனில் அடிமைப்பட்டுக் கிடந்தது பழனிசாமி அரசு. ஆளுநர்கள் வித்யாசாகர் ராவ், பன்வாரிலால் புரோகித் ஆகியோருக்குச் சேவகம் செய்து, மாநில உரிமையைப் பறிகொடுத்தார். தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், உதய் மின் திட்டம், நீட் ஆகியவற்றை ஜெயலலிதா தீரத்தோடு எதிர்த்தார். அதனையெல்லாம் பழனிசாமியோ பயத்தோடு ஆதரித்தார். பிரதமர் மோடி ஜெயலலிதாவின் போயஸ் கார்டனுகே வந்தார். பழனிசாமி அமித் ஷா வீட்டிலேயே தவம் கிடந்தார்.

மத்திய அரசின் சென்னை சேலம் இடையே எட்டு வழிச்சாலைக்காக, வனங்களையும், வயல்களையும் பலி கெடுக்கத் தயாரானார். கேஸ், பெட்ரோல், டீசல் விலை உயர்ந்த போதெல்லாம் ஜெயலலிதாவிடம் இருந்து கடுமையாக அறிக்கை வரும். போராட்டம் நடத்துவார். ஆனால், பழனிசாமியிடம் இருந்து ஓர் அறிக்கையாவது வந்ததா?

அண்ணா பல்கலைக்கழகத் துணை வேந்தராக கர்நாடகாவைச் சேர்ந்த சூரப்பாவை ஆளுநர் பன்வாரிலால் புரோகித் நியமித்தார். தமிழர்களுக்குத் துணைவேந்தராகும் தகுதி கிடையாது என்று அவமானப்படுத்தப்படுத்தி, தமிழர்களின் தன்மானம் சீண்டப்பட்ட போது பழனிசாமி எதிர்த்து குரல் கொடுத்தாரா? துணைவேந்தர் நியமனம் தொடர்பாக சட்டப் போராட்டம் நடத்தி, இந்தியா முழுமைக்கும் அதிகாரம் பெற்றுத் தந்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் போல சூரப்பா விவகாரத்தில் சூரத்தனம் காட்டினாரா பழனிசாமி?

ஆய்வு என்ற பெயரில் ஆளுநர் பன்வாரிலால் புரோகித் தனிராஜ்ஜியம் நடத்திய போது அன்றைய எதிர்க்கட்சியான திமுக போராட்டங்களை நடத்தியது. ஆனால், முதல்வர் பழனிசாமி எதிர்ப்பு காட்டாமல் பல்லிளித்துக் கொண்டிருந்தார். இப்படி எத்தனை எத்தனை துரோகங்கள். தலைவிக்குத் துரோகம் செய்துவிட்டு டெல்லி தலைமைக்குக் கட்டுப்படும் கோழை பழனிசாமி, மிரட்டல் பற்றியெல்லாம் பேச அருகதை இல்லை!

நீட் தேர்வை அனுமதித்து அப்பாவி ஏழை நடுத்தரக் குடும்பத்துப் பிள்ளைகளின் மருத்துவக் கனவை நாசமாக்கியது, தமிழத்துக்கு பாரபட்சமான நிதிப் பகிர்வு அளிக்கும் நிஷிஜியை எந்தக் கேள்வியும் கேட்காமல் அப்படியே ஏற்றுக் கொண்டது, குடியுரிமைச் சட்டத்தை ஆதரித்து வாக்களித்து முஸ்லிம்களின் முதுகில் குத்தியது, உழவர்களைப் பாதிக்கும் மூன்று வேளாண் சட்டங்களை ஆதரித்து விவசாயிகளுக்குத் துரோகம் செய்தது,

மாநில உரிமைகளைப் பறித்து ஒற்றை ஆட்சியைக் கொண்டு வரத் துடிக்கும் ஒன்றிய பாஜக அரசின் ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டத்திற்கு ஆதரவு, கனிம வளச்சட்டத் திருத்த மசோதாவை ஆதரித்து மதுரை அரிட்டாபட்டியில் சுரங்க ஏலம் விடக் காரணமாக இருந்தது என மோடி அரசுக்குத் துணையாக நின்ற விஷயங்கள் எல்லாம் அதிமுக வரலாற்றின் கருப்பு பக்கங்கள்.

2019ஞ் 2024 மோடி ஆட்சியில் திமுக கூட்டணி எம்.பிகள் 9,695 கேள்விகளை ஐந்தாண்டில் மக்களவையில் எழுப்பினர். 1,949 விவாதங்களில் பங்கெடுத்தனர். 59 தனிநபர் மசோதாக்களைக் கொண்டு வந்தனர். மாநில வாரியாக நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயல்பாட்டில் தமிழக எம்.பிகள் 5வது இடத்தில் இருந்தனர். கட்சிகள் வாரியாக கேள்விகள் எழுப்பியதில் திமுக 5வது இடத்தில் இடம் பெற்றது. நாடாளுமன்றத்தில் அதிமுக சாதித்தது என்ன? என பழனிசாமி புள்ளிவிவரம் சொல்லுவாரா?

நீட் தேர்வைத் திரும்பப் பெறத் தொடர் போராட்டம், மதுரை எய்ம்ஸ் கட்டுமானப் பணிகளை விரைந்து முடிக்க வலியுறுத்தல், காவிரி, மேகேதாட்டு பிரச்சினைகளில் தமிழக உரிமையை விட்டுக் கொடுக்காமல் போராடியது, ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாகக் குரல், ஜம்மு காஷ்மீருக்கு வழங்கப்பட்ட சிறப்பு அந்தஸ்து ரத்துக்கு எதிர்ப்பு, மூன்று வேளாண்மை சட்டங்களை எதிர்த்தது, புதிய கல்விக் கொள்கைக்கு எதிர்ப்பு எனத் தமிழக உரிமைக்காக திமுக தொடர்ந்து போராடி வருகிறது.

இப்படி எதற்கும் குரல் கொடுக்காத பழனிசாமி, தமிழகத்தின் உரிமைகளுக்கும், தமிழக மக்களின் நலனுக்கும் அயராது போராடி வரும் திமுகவை பற்றிப் பேச என்ன திராணி இருக்கிறது? தனது குடும்பத்தைக் காப்பாற்ற மோடி அரசின் அதிகார அமைப்புகளுக்குப் பயந்து, பாஜகவுடன் சேர்ந்த அமலாக்கத் துறை கூட்டணிதான் அதிமுக கூட்டணி.

“அதிமுக ஞ் பாஜக கூட்டணி மகிழ்ச்சியோடு அமைந்திருக்கிறது” என்கிறார் பழனிசாமி. கூட்டணி அறிவிப்பை அமித் ஷா வெளியிட்ட போது பக்கத்தில் பொம்மையாக அமர்ந்திருந்த பழனிசாமி மகிழ்ச்சி பற்றியெல்லாம் பேசுவது வேடிக்கை. கூட்டணி மகிழ்ச்சி என்றால் பட்டாசு வெடித்துக் கொண்டாட வேண்டியதுதானே! ஏன் செய்யவில்லை? ‘பாஜகவுடன் இனி கூட்டணி இல்லை’ எனப் பேசிய பழனிசாமி எந்த வெட்கமும் இல்லாமல் பாஜகவுடன் கூட்டணி வைத்துக் கொண்டு பேசும் வீரவசனங்களைக் கோமாளியின் உளறல்களாகத்தான் தமிழக மக்கள் பார்க்கிறார்கள்.

மத்திய பாஜகவின் காலடியில் தமிழ்நாட்டின் உரிமைகளை அடகுவைத்து தமிழகத்தைச் சீர்கெடுத்த ஆட்சிதான் அதிமுக பாஜக ஆட்சிகள். இந்தத் துரோகக் கூட்டணிக்குக் கடந்த தேர்தல்களிலேயே தமிழக மக்கள் தோற்கடித்துத் தக்கப் பதிலடி கொடுத்தனர். வரும் சட்டமன்றத் தேர்தலிலும் இந்த அடிமை அமலாக்கத்துறை கூட்டணியை மக்கள் ஓட ஓட விரட்டி அடிப்பார்கள்.

பாஜகவின் காலடியில் வீழ்ந்து அடிமை சேவகம் செய்யும் பழனிசாமியின் அரசியல் அத்தியாயம் 2026 சட்டப்பேரவைத் தேர்தலோடு முடியப் போவது உறுதி. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# திருச்செங்கோடு நீட் தேர்வு மையத்தில் சர்வர் கோளாறு: பெற்றோர் சாலை மறியல்

நாமக்கல், மே.5-

சர்வர் கோளாறு காரணமாக திருச்செங்கோடு அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நீட் தேர்வு எழுத வந்த மாணவ, மாணவியர் பயோ மெட்ரிக் முறையில் பதிவு செய்யாமல் தேர்வு அறைக்குள் அனுமதிக்கப்பட்டனர். இதைக் கண்டித்து மாணவர்களின் பெற்றோர் சாலை மறியலில் ஈடுபட்டனர்.



திருச்செங்கோட்டில் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஆகியவற்றில் நீட் தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. தேர்வு எழுதுவதற்காக திருச்சி, மதுரை போன்ற வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர் இன்று மேற்குறிப்பிட்ட இரு மையங்களுக்கும் வந்திருந்தனர். இதில் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி தேர்வு மையத்தில் தேர்வு எழுத வந்த மாணவ, மாணவியர் தீவிர பரிசோதனைக்குப் பின் பயோமெட்ரிக் கருவியில் கைரேகை பெறப்பட்டு உள்ளே அனுமதிக்கப்பட்டனர். 420 மாணவ, மாணவியருக்கு பின் பயோமெட்ரிக் சிஸ்டத்தில் கோளாறு ஏற்பட்டது.

இதனால் காலதாமத்தை தவிர்க்க பயோமெட்ரிக் சிஸ்டம் இல்லாமலே மாணவ, மாணவியர் தேர்வு மையத்திற்குள் அனுமதிக்கப்பட்டனர். இதைக்கண்ட மாணவ, மாணவியரின் பெற்றோர் தேசிய தேர்வு முகமை நிர்வாகம் போதுமான வசதிகள் செய்யவில்லை என புகார் எழுப்பி திருச்செங்கோடு சங்ககிரி சாலையில் திடீர் மறியலில் ஈடுபட்டனர்.

தகவல் அறிந்த நகர காவல் துறையினர், வருவாய் துறை அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து மறியலில் ஈடுபட்ட பெற்றோரிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது பயோமெட்ரிக் சர்வர் குறைபாடுகள் இருப்பதாகவும், பயோமெட்ரிக் கருவி ஒன்று மட்டுமே வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறி இதில் 300க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் பதிவு செய்யாமல் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் தங்கள் குழந்தைகள் நீட் தேர்வு எழுதியும் அரசின் நிர்வாக கோளாறால் அவர்களது தேர்ச்சி பாதிக்கப்படும் சூழல் உள்ளது. எங்களுக்கு உரிய நியாயம் கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என்றனர்.

இதுகுறித்து தேசிய தேர்வு முகமை அதிகாரிகள் கூறுகையில், “அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 720 பேர் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டிருந்தனர். 9 பேர் தேர்வு எழுத வரவில்லை. மீதி உள்ள 711 பேர் எழுத அனுமதிக்கப்பட்டனர். இதில் 411 மாணவர்கள் தேர்வு எழுத பயோமெட்ரிக்கில் பதிவு செய்யப்பட்டது. அதன்பின் சர்வர் சரியாக வேலை செய்யவில்லை. எனவே மீதமுள்ள 300 மாணவ, மாணவியர் பயோமெட்ரிக் பதிவு செய்யவில்லை. அதற்கு பதில் விடைத்தாள் எண் (ஓஎம்ஆர்) பதிவு செய்து கொண்டு தேர்வு எழுத அனுமதித்துள்ளோம். தேர்வு எழுதுவதில் எந்த காலதாமதமும் ஏற்படவில்லை.” என்றனர்.

இதனிடையே தேசிய தேர்வு முகமை நாமக்கல் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சிவசேனன் தலைமையிலானோர் மறியலில் ஈடுபட்டோரிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது, “711 பேருக்கும் ஓஎம்ஆர் சீட்டு வழங்கப்பட்டுள்ளது. அதுவே தேர்வு எழுத வந்ததாக கணக்கில் கொல்லப்படும். பயோமெட்ரிக் மாணவர்களை அடையாளம் காணுவதற்கான ஒரு வழிமுறை தான். சர்வர் பாதிப்பினால் தான் அவ்வாறு செய்ய முடியவில்லை. காலதாமதம் எதுவும் ஏற்படவில்லை.” என்றனர்.

இதையேற்ற பெற்றோர் தங்களது மறியல் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர். பெற்றோர் போராட்டத்தால் திருச்செங்கோடு சங்ககிரி சாலையில் 2 மணி நேரம் வாகனப் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

தாம்பரத்தில் செங்கல்பட்டு வட மேற்கு தமிழக வெற்றி கழகம் சார்பில் மே 1 தொழிலாளர் தினத்தை முன்னிட்டு

# கட்டிடத் தொழிலாளர்களுக்கு உபகரணங்கள் புடவை மற்றும் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை வழங்கும் விழா

தாம்பரம், மே.05-

செங்கல்பட்டு மாவட்டம் தமிழக வெற்றி கழகம் செங்கல்பட்டு வடக்கு மேற்கு தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட 54வது வட்டக் கழக சார்பில் தொழிலாளர்களுக்கு நல திட்ட உதவி வழங்கும் விழா 54வது வட்டம் எஸ் லோகேஷ் மற்றும் நிர்வாகிகள் ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு வட மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் கில்லி டி.சரத்குமார், மாவட்ட கழக இணை செயலாளர் இ.விஜய் தியாகு ஆகியோர் கலந்து கொண்டு கட்டிடத் தொழிலாளர்களுக்கு பயன்படுத்தும் உபகரணங்கள், மகளிருக்கு புடவை மற்றும் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை வழங்கினார்கள்



இந்த நிகழ்ச்சியில் தாம்பரம் மேற்கு பகுதி எம்.பிரவீன் குமார், கே.எம். மணிகண்டன், 54வது வட்டக் கழக நிர்வாகிகள் எம்.எஸ். விஜய், ஆர்.ஆனந்த், கே.முத்துகிருஷ்ணன், எஸ்.அறிவழகன், எஸ்.தினேஷ், கே.ஸ்ரீதர், விக்னேஷ், முத்துக்குமார், சிவலிங்கம் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய பகுதி வார்டு மற்றும் மகளிர் அணி கழக நிர்வாகிகள் உட்பட அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்

# படூர் ஊராட்சியில் மே 1 உழைப்பாளர் தினத்தையொட்டி 500க்கும் மேற்பட்டோருக்கு பிரியாணி வழங்கி சிறப்பு கிராம சபை கூட்டம்

படூர், மே.05-

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட படூர் முதல் நிலை ஊராட்சி மன்ற வளாகத்தில் வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் மே 1 உழைப்பாளர் தினத்தையொட்டி சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு படூர் மாற்றத்தை நோக்கி அறக்கட்டளையின் நிர்வாகியும், ஊராட்சி மன்ற தலைவருமான கே. ஏ. எஸ். தாராசுதாகர் தலைமை தாங்கினார். துணைத் தலைவர் வனிதா சேட்டு , வார்டு உறுப்பினர்கள் முன்னிலை வகித்தனர்கள். முதலாவதாக படூர் ஊராட்சி மன்ற செயலாளர் நித்தியானந்தம் ஆண்டு அறிக்கையை வாசித்தார்.

தொடர்ந்து படூர் ஊராட்சியில் சென்ற கிராம சபை கூட்டத்திற்கும், நேற்று நடந்த கிராம சபை கூட்டத்திற்கும் இடையே படூர் ஊராட்சி மன்ற நிர்வாகத்தால் செயல் முறைப் படுத்தப்பட்ட திட்டங்கள், வரவு செலவுகள் குறித்து பொதுமக்களிடையே விவாதிக்கப்பட்டது. இதில்




குடிநீர் சாலை வசதி, சுகாதாரம், மின்சாரம், ஒன்றிய அலுவலகத்தின் மூலம் பெறப்பட்ட திட்டங்கள் அதற்கான நிதிகள் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் குறித்து பொது மக்கள் விவாதித்தனர்கள். தொடர்ந்து இறுதியாக உழைப்பாளர்கள் தினத்தையொட்டி படூர் முதல் நிலை ஊராட்சி மன்றத்தில் பணிபுரிந்து வரும் சுமார் 50க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்களை ஊராட்சி மன்றம் சார்பில் தலைவர் கே. ஏ .எஸ். தாராசுதாகர் துணைத் தலைவர் வனிதாசேட்டு, வார்டு உறுப்பினர்கள் ஆகியோர்கள் இணைந்து ஒவ்வொரு தூய்மை பணியாளர்களுக்கும் தனித்தனியே சால்வை அணிவித்தும், பூங்கொத்து வழங்கியும், புத்தாடை வழங்கியும் தொழிலாளர் தின நல்வாழ்த்துக்கள் தெரிவித்தனர்கள். மேலும் படூர் முதல் நிலை ஊராட்சியில் ஊராட்சி மன்ற தலைவர் சீரிய முயற்சியில் தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கான பணி ஆணைகள் பெறப்பட்டு உரிய பயனாளர்கள் சுமார் 40க்கும் மேற்பட்டவர்களுக்கு அதற்கான ஆணைகள் வழங்கப்பட்டன. இறுதியாக கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக பாரதியார் தெரு, சாலையில் நிலவி வந்த சாலை பிரச்சனையை நிரந்தரமாக தீர்வு காணும் வகையில் தார் சாலை அமைத்துக் கொடுத்த தலைவருக்கு பொதுமக்கள் சார்பு அணிவித்து நன்றி தெரிவித்தனர்கள். பின்பு ஊராட்சி மன்ற தலைவர் ஏற்பாட்டில் செய்யப்பட்டிருந்த சமபந்தி விருந்தில் சுமார் 500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு கறி விருந்து பிரியாணி அருஞ்சுவை உணவு பரிமாறப்பட்டன. நடைபெற்ற சிறப்பு கிராம சபை கூட்டத்தில் படூர் ஊராட்சியில் வசித்து வரும் அனைத்து கட்சியினர்கள் ,சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள், ஊராட்சி மன்ற தூய்மை பணியாளர்கள், ஊழியர்கள் என அனைவரும் கலந்து கொண்டனர்கள். இந்நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளும் ஊராட்சி மன்றம் சார்பில் செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# பழனியில் மூன்றாம் ஆண்டு மாநில அளவிலான ஸ்போர்ட்ஸ் கிளப் மற்றும் சிலம்ப பயிற்சி பள்ளி இணைந்து நடத்தும் கபடி போட்டி

திண்டுக்கல், மே.05-

திண்டுக்கல் மாவட்டம் பழனி புது தாராபுரம் ரோட்டில் அமைந்துள்ள மைதானத்தில் பழனி ஸ்போர்ட்ஸ் கிளப் மற்றும் சிலம்ப பயிற்சி பள்ளி மூன்றாம் ஆண்டு மாநில அளவிலான பெண்கள் கபடி போட்டி நடைபெற்றது. இப்போட்டியினை துவங்கி வைக்க வருகை தந்த தென்னிந்திய பார்வர்டு பிளாக் கட்சி மாநில பொதுச் செயலாளர் சபரிக்கு விழாவினை ஏற்பாடு செய்திருந்த குழுவினர்கள் சிறப்பான வரவேற்பு அளித்தனர்.. பின்பு மாணவிகளுக்கான கபடி போட்டியை தொடங்கி வைத்தார் விழாவில் தலைமை தாங்கி பேசும்போது, கிரிக்கெட் வீரர்கள் மற்ற அணி வீரர்களை எதிரிகளாக பார்க்காமல், வெற்றி தோல்வியை பார்க்காமல்



நண்பர்களாக பாவித்து விளையாட வேண்டும். விளையாட்டில் தோல்வி என்பது வெற்றிக்கு அடுத்த படியாகும் என்று வீரர்களுக்கு அறிவுரை வழங்கினார். தொடர்ந்து நிறுவனத் தலைவர் மாறன்ஜி அறிவுறுத்தலின்படி நிறைய நலத்திட்டங்கள் அனைத்து மாவட்ட ங்களிலும் நடைமுறைப்படுத்த ஆலோசித்து வருகின்றனர் மற்றும் இவ்விழாவில் மாநில மாவட்ட நகர ஒன்றிய கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்




■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சிப்காட்டில் தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் 72 வது பிறந்தநாளை முன்னிட்டு நேதாஜி ஸ்போர்ட்ஸ் கிளப் அணியினர் நடத்திய 10 ஓவர் கிரிக்கெட் போட்டி 12 அணிகள் பங்கேற்றனர் இதில் முதல் பரிசை இளம்புயல் அணியினரும் இரண்டாம் வரிசை கே.என். ஆர்.பாய்ஸ் அணியினரும் பெற்றுச் சென்றனர் இந்த ஆட்டத்தில் இறுதிப்போட்டியை திமுக நகர செயலாளர் பொன்னுச்சாமி நேற்று துவக்கி வைத்தார் முதல் பரிசு பெற்ற இளம்புயல் அணியினருக்கு மானாமதுரை நகராட்சி 2வது வார்டு கவுன்சிலர் இந்துமதி திருமுருகன் பரிசை வழங்கினார். இரண்டாம் பரிசு பெற்ற கே என் ஆர் அணியினர் அணியினருக்கு நகர திமுக இளைஞரணி துணை அமைப்பாளர் அதியமான் பொன்னுச்சாமி முன்னிலையில் முன்னாள் எம்ஆர்எப் கிரிக்கெட் வீரர்கள் வழங்கினார்கள்

# 17 ஆண்டுகளுக்கு பிறகு காரைக்கால் அம்மையார் கோயில் கும்பாபிஷேகம் கோலாகலம்: திரளான பக்தர்கள் தரிசனம்

**காரைக்கால், மே.05–**

காரைக்கால் அம்மையார் கோயில் கும்பாபிஷேகம் இன்று காலை நடந்தது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று தரிசனம் செய்தனர். அறுபத்துமூன்று நாயன்மார்களில் பெண் நாயன்மார் மற்றும் சிவபெருமானால் அம்மையே என்று அழைக்கப்பட்டவர் காரைக்கால் அம்மையார். காரைக்காலில் உள்ள காரைக்கால் அம்மையார் கோயிலில் ஆண்டுதோறும் அம்மையாரின் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் வகையில் மாங்கனி திருவிழா வெகுவிமரிசையாக நடைபெறும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த காரைக்கால் அம்மையார் கோயிலில் 17 ஆண்டுகளுக்கு பிறகு இன்று காலை கும்பாபிஷேகம் நடந்தது. இதையொட்டி கடந்த 1ம் தேதி முதல்கால யாகசாலை பூஜையுடன் விழா துவங்கியது. இன்று அதிகாலை ஆறாம் கால யாகசாலை பூஜை நடந்தது. பின்னர் யாகசாலையில் இருந்து கடங்கள் புறப்பட்டு கோயிலை வலம் வந்தது. இதையடுத்து வேத



மந்திரங்கள் முழங்க கோபுர கலசங்களுக்கு புனிதநீர் ஊற்றி கும்பாபிஷேகத்தை சிவாச்சாரியார்கள் நடத்தி வைத்தனர். அப்போது பக்தர்கள் ஓம் நமச்சிவாயா என்ற பக்தி கோஷங்களை எழுப்பி வழிபட்டனர். தொடர்ந்து காரைக்கால் அம்மையாருக்கு சிறப்பு அபிஷேக, ஆராதனை நடந்தது. கும்பாபிஷேக விழாவில் அமைச்சர் திருமுருகன், எம்எல்ஏக்கள் நாஜிம், நாக தியாகராஜன், சிவா மற்றும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.

பாபநாசம்

நெல்லை மாவட்டத்தில் பிரசித்திப் பெற்ற பாபநாசம் உலகம்மை சமேத பாபநாச சுவாமி கோயில், 2 ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தது. நவ கைலாயத்தில் முதலாவது தலமாக சூரியனுக்கு அதிபதியாக விளங்கும் இக்கோயிலில், கடந்த 2005 செப்.4ம் தேதி கும்பாபிஷேகம் நடந்தது. இந்நிலையில், இந்தக் கோயிலில் இன்று கும்பாபிஷேக விழா நடந்தது. காலை 7.45 மணிக்கு உலகம்மை சமேத பாபநாச சுவாமி விமானங்கள் மற்றும் ராஜகோபுரம், பரிவார மூர்த்திகள் சமகால மகா கும்பாபிஷேகம், காலை 8.10 மணிக்கு பாபநாச சுவாமி மூலஸ்தான மகா கும்பாபிஷேகம், காலை 8.20 மணிக்கு உலகம்மை மூலஸ்தான மகா கும்பாபிஷேகம், தொடர்ந்து தீபாராதனை நடந்தது.



# புதுக்கோட்டை மாவட்டத்தில் தேசிய தேர்வு முகமையின் நீட் நுழைவுத்தேர்வினை 2,849 நபர்கள் எழுதினார்கள்

## மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தகவல்

புதுக்கோட்டை, மே.05-

புதுக்கோட்டை ஸ்ரீ பிரகதாம்பாள் அரசினர் மேல்நிலைப்பள்ளி தேர்வு மையத்தில், தேசிய தேர்வு முகமையின் நீட் நுழைவுத்தேர்வு நடைபெற்றதை, மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா, நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது;

2025- 2026 ஆம் கல்வியாண்டு சேர்க்கைக்கான, தேசிய தேர்வு முகமையினால் நடத்தப்படும் எழுத்துத் தேர்வு இன்றையதினம் நடைபெற்றது. இதில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள புதுக்கோட்டை இராணியார் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, அறந்தாங்கி அரசு தொழில்நுட்பக் கல்லூரி, கந்தர்வகோட்டை அரசு தொழில்நுட்பக் கல்லூரி, முள்;ர் அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி, புதுக்கோட்டை ஸ்ரீ பிரகதாம்பாள் அரசினர் மேல்நிலைப்பள்ளி, சிவபுரம் எம்.ஆர்.எம். பள்ளி, மாத்தூர் பாவேந்தர் பாரதிதாசன் பொறியியல் கல்லூரி ஆகிய 7 தேர்வு மையங்களில் இன்றைய தினம் நீட் நுழைவுத் தேர்வு நடைபெற்றது. இதில், புதுக்கோட்டை ஸ்ரீ பிரகதாம்பாள் அரசினர் மேல்நிலைப்பள்ளி தேர்வு மையத்தில், தேசிய தேர்வு முகமையின் நீட் (ழிநுநுவு) நுழைவுத்தேர்வு நடைபெற்றதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

அந்தவகையில், புதுக் கோட்டை மாவட் டத்தில் அமைக்கப் பட்டுள்ள 7 தேர்வு மையங்களில் இன்றையதினம் நடைபெற்ற தேசிய தேர்வு முகமையின் நீட் நுழைவுத் தேர்வினை எழுதுவதற்கு 2,929 நபர்கள் விண்ணப்பி த்திருந்தனர். இதில் இன்றையதினம் 2,849 நபர்கள் தேர்வு எழுதினார்கள். மேலும் 80 நபர்கள் தேர்வு எழுதவில்லை. மேலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற இத்தேர்வினை துணை ஆட்சியர் நிலையில் கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு, தேர்வு பாதுகாப்பான முறையில் நடைபெற்றது.

எனவே, புதுக்கோட்டை மாவட்டத்தில் தேர்வு எழுதும் தேர்வர்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும், தேர்வுகள் நடைபெற்று வரும் மையங்களில் ஏற்பாடு செய்யப்பட்டு, சுமுகமான முறையில் தேர்வுகள் நடைபெற்றது எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) திருமதி.அ.ஷோபா, முதன்மை கல்வி அலுவலர் திரு.கூ.சண்முகம், பள்ளித்துணை ஆய்வாளர் திரு.குருமாரிமுத்து மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

# ரேபிஸ் இல்லா கொடைக்கானல் என்ற தலைப்பில் இலவச நாய்கள் தடுப்புப்பூசி முகாம்

கொடைக்கானல், மே.05-

ரேபிஸ் இல்லா கொடைக்கானல் என்ற தலைப்பில் இலவச நாய்கள் தடுப்புப்பூசி முகாம் இன்று தொடங்கி வரும்10 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது .கொடைக்கானல் மற்றும் அதனை சுற்றி உள்ள கிராம பகுதிகளை சேர்ந்த சுமார் 5000 நாய்களுக்கு தடுப்பூசி செலுத்த திட்டம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முகாமினை கூடுதல் முதன்மை செயலாளர் மற்றும் மின்வாரிய நிர்வாக இயக்குநர் ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டு இந்த முகாமை தொடங்கி வைத்தார்.

அதனை தொடர்ந்து பேசிய அவர் நாய்களையும் சமூகத்தையும் ரேபிஸ் என்ற உயிருக்கு ஆபத்தான நோயிலிருந்து பாதுகாப்பது முக்கியம் எனவே கண்டிப்பாக நாய்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட வேண்டும்




என தெரிவித்தார். மேலும் வீட்டு குப்பைகை பொது இடங்களில் கொட்டாமல் இருந்தால் தெரு நாய்கள் அந்தப்பகுதிகளில் கூட்டமாக இருப்பதை தவிர்க்க முடியும், மேலும் வீட்டு நாய்கள் வளர்ப்பவர்கள் அதன் வளர்ப்பு பண்பு தெரிந்திருந்தாலும் அதற்கும் கண்டிப்பாக முன்வந்து தடுப்பூசி செலுத்த வேண்டும், நாய்கள் வளர்ப்பவர்களும் தடுப்பூசி செலுத்தி கொள்ள வெண்டும் என தெரிவித்தார்.

மேலும் நாய்கள் கடித்த பின்பு மருத்துவர்கள் அறிவுறுத்தலின்படி தடுப்பூசிகளை செலுத்திக் கொள்ள வேண்டும் எனவும் பெயரளவுக்கு ஒரு தவணை மற்றும் இரண்டு தவணையில் அந்த தடுப்பூசியை செலுத்தாமல் நிறுத்திக் கொள்ளக்கூடாது எனவும் எச்சரித்தார்.

குறிப்பாக நாய்கள் கடிப்பது மட்டுமல்லாமல் நாய்கள் லேசாக தாக்கினால் கூட உடனடியாக தடுப்பூசி செலுத்தி கொள்வது நல்லது என தெரிவித்தார்.

மேலும் பிளாஸ்டிக் தடுப்பு குறித்து அதிகாரிகள் துரிதமாக செயல்பட்டு வருவது போல இந்த தடுப்பூசி முகாமை அனைத்து பகுதியில் உள்ள கால்நடைகளுக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்க கேட்டு கொண்டார்.

வெறிபிடித்த நாய்கள் கடித்தால் அதற்கு ஒரே தீர்வு ரேபிஸ் தடுப்பூசி எனவே கண்டிப்பாக இதனை பொது மக்கள் பயன்படுத்தி தாங்கள் வளர்க்கக்கூடிய வளர்ப்பு நாய்களுக்கு கண்டிப்பாக செலுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

அதனை தொடர்ந்து தற்பொழுது கோடைகாலம் தொடங்கியுள்ள நிலையில் தடையில்லா மின்சாரம் வழங்குவது குறித்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் கொடைக்கானல் மலை பகுதிகளில் மழைக் காலங்களில் அடிக்கடி மரம் விழுந்து அடிக்கடி மின் தடை ஏற்படுவதன் காரணமாக கூடுதல் மின் உற்பத்தி நிலையம் அமைப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

தற்பொழுது தமிழகத்தில் 16 ஆயிரம் மின் பணியாளர்கள் பணி நிறைவு பெற்ற நிலையில் விரைவில் அதற்கான காலியிடங்களை நிரப்புவதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் என தெரிவித்தார்.

# “நிறைந்தது மனம்” நிகழ்ச்சியின் கீழ் முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் பயனடைந்த விவசாயிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா நேரில் சந்தித்து பயன்கள் குறித்து கேட்டறிந்தார்

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற நாளிலிருந்து தமிழ்நாட்டின் கடைகோடி கிராம மக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து, பிற மாநிலங்களே வியந்து பாராட்டும் வகையில், இது நமது அரசு என்று பொதுமக்கள் அனைவரும் சொல்லும் அளவிற்கு சிறப்பாக பணியாற்றி வருகிறார்கள்.

தற்போது வேளாண்மையில் ஒரே பயிரைத் தொடர்ந்து சாகுபடி செய்வதாலும், மண்ணிலிருந்து சத்துகளை அதிகம் உறிஞ்சும் பயிர்களைச் சாகுபடி செய்வதாலும், மண்ணின் வளம் குறைந்து கொண்டே வருகிறது. இதுதவிர, உற்பத்தி அதிகரிப்பிற்கென அதிக அளவில் இரசாயன உரங்கள், களைக்கொல்லிகள், பூச்சிக்கொல்லிகள் போன்றவற்றைப் பயன்படுத்துவதால் மண்ணிலுள்ள நுண்ணுயிர்களின் எண்ணிக்கை குறைந்து மண்வளமும், சாகுபடி செய்யும் திறனும் குறைந்துள்ளன.

எனவே, மண்வளத்தைப் பேணிக்காக்கவும், மக்கள் நலன் காக்கும் விதமான உயிர்ம வேளாண்மை போன்ற அனைத்து வேளாண் செய் முறைகளையும் ஊக்கப்படுத்திடவும் 2024 25 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் ”முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்” என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் அறிவிக்கப்பட்டது முதல் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கையில்

கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிகளவு விவசாயிகள் நெல், வாழை, ரப்பர், கிராம்பு, நல்லமிளகு, காய்கறிகள், பழங்கள், ஊடுபயிர்கள் உள்ளிட்டவைகள் பயிர் செய்து வருகிறார்கள். வேளாண்மை



உழவர் நலத்துறையின் கீழ் முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் வாயிலாக இயற்கை முறையில் மண்வளத்தை பெருக்கி அதிக மகசூல் பெற்றிடவும் பெரும் உதவியாக இருக்கும்.

அதனடிப்படையில் இத்திட்டத்தின் கீழ் 89 விவசாயிகளுக்கு மானிய விலையில் மண்புழு உரப்படுக்கைகள் ரூ.3 இலட்சத்திற்கும், வேளாண் காடுகளை ஊக்குவித்தல் 182 விவசாயிகளுக்கு 7000 வேப்ப மரக்கன்றுகள் முழு மானியத்தில் ரூ.1.4 இலட்சத்திற்கும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் வட்டாரத்திற்கு ஒரு உயிர்ம வேளாண்மை மாதிரி பண்ணைத் திடல் வீதம் 9 செயல் விளக்கத் திடல்கள் ரூ.90,000 மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் இயற்கை இடுபொருள் தயாரிப்பு மையம் இயற்கை விவசாயத்தில் ஈடுபட்டுள்ள குழுக்களுக்கு ஒரு குழுவிற்கு ஒரு இலட்சம் வீதம் 2 குழுவிற்கு ரூ.2 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. நெல் ஜெயராமன் மரபு சார் நெல் ரகங்கள் பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் 1.37 டன் பாரம்பரிய நெல் விதைகள் 69 விவசாயிகளுக்கு ரூ.34,250 மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது. இயற்கையிலே பூச்சிக்கொல்லி பண்புகளுடைய 1,30,000 ஆடாதொடா, நொச்சி நடவு கன்றுகள் முழு மானியத்தில் 2600 விவசாயிகளுக்கு ரூ.2.6 இலட்சம் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து மண்வளம் காக்க 3050 மண்வள அட்டைகள் ரூ.9.15 இலட்சம் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 865 விவசாயிகளுக்கு 991 லிட்டர் திரவ உயிரி உரங்கள் ரூ.1.50 இலட்சம் மானியம் என மொத்தம் 6866 விவசாயிகளுக்கு ரூ.20.90 இலட்சம் மானியம் வழங்கி விவசாயத்திற்கும் விவசாயிகளுக்கும் ஏற்றத்தை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டமானது இந்த ஆண்டும் செயல்படுத்தப்படவுள்ளது. எனவே விவசாயிகள் அருகிலுள்ள வேளாண் விரிவாக்க மையங்களை நில ஆவணங்களுடன் அணுகி இத்திட்டத்தில் பயன்பெற்றிட கேட்டுக்கொள்கிறேன்.

நிறைந்தது மனம் திட்டத்தின் கீழ் முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் மண்புழு உரப்படுக்கை பெற்று பயனடைந்த கிள்ளியூர் வட்டாரம் மிடாலம் அ ஊராட்சிக்குட்பட்ட மாகன்றுவிளை பகுதியை சேர்ந்த திரு.சிவகுமார் அவர்கள் தெரிவிக்கையில்:

வணக்கம், எனது பெயர் திரு.சிவகுமார், (வயது53) நான் Bsc., B.Ed முடித்த பட்டதாரி. நான் பாரம்பரிய விவசாய குடும்பத்தை சார்ந்தவன். எனக்கு விவசாய பணி மிகவும் பிடிக்கும். என்னுடைய விவசாய நிலத்தில் அதிகளவு தென்னை மரங்களை நடவு செய்து இயற்கை முறையில் விவசாயம் செய்து வருகிறேன். இதற்கு ஒரு ஏக்கருக்கு ரூ.25000 வரை



தொழுஉரம் செலவானது. நான் 4 மாடுகள் வளர்கிறேன். அவற்றின் சாணத்தை முறையாக பயன்படுத்தாமல் குவித்து வைத்திருந்தேன். எனது பகுதி உதவி வேளாண்மை அலுவலர் அவர்கள் இதனை பார்வையிட்டு, முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் மண்புழு உரப்படுக்கைகள் பற்றியும் அதன் பயன்பாட்டை குறித்தும் எடுத்துக் கூறினார்கள். மாட்டு சாணத்தையும் இதர பயிர் கழிவுகளையும் வீணாக்காமல் மக்கவைத்து உரமாக்கிட அறிவுரை கூறினார்கள்.

இத்திட்டம் குறித்து அறிந்த பின், என்னுடைய பெயரில் 2 எண்ணம் மண்புழு உரப்படுக்கைகள் வேண்டி விண்ணப்பித்தேன். என்னுடைய விண்ணப்பத்தினை பரிசீலித்து, எனக்கு மானியத்தில் 2 எண்ணம் மண்புழு உரப்படுக்கைகள் மற்றும் 2 கிலோ மண்புழுக்கள்



வழங்கப்பட்டது. எனக்கு வழங்கப்பட்ட மண்புழு உரப்படுக்கைகளை பயன்படுத்தி நான் தற்போது வரை 2 டன் மண்புழு உரம் தயாரித்து எனது தென்னந்தோப்பில் பயன்படுத்தி வருகிறேன். மண்புழு உரப்படுக்கைகள் மண்புழு உரம் தயாரித்து பயன்படுத்தி எனது தென்னந்தோப்பில் இயற்கை முறையில் விவசாயம் செய்ய பேருதவியாக இருக்கிறது. இத்திட்டத்தினை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நிறைந்த மனதுடன் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

நிறைந்தது மனம் திட்டத்தின் கீழ் முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம் இயற்கை இடுபொருள் தயாரிப்பு மையம் அமைத்தல் திட்டத்தில் பயனடைந்த இராஜாக்கமங்கலம் வட்டாரம் புத்தளம் வருவாய் கிராமத்தை சேர்ந்த குழு திரு.ஸ்ரீ கிருஷ்ணபெருமாள் தெரிவிக்கையில்:

எனது பெயர் ஸ்ரீ கிருஷ்ண பெருமாள் இராஜாக்கமங்கலம் வட்டாரத்தில் அமைந்துள்ள புத்தளம் விவசாய ஆர்வலர் குழு உறுப்பினராக இருக்கிறேன். நஞ்சில்லா உணவை உற்பத்தி செய்யும் உழவர்களை ஊக்குவிக்க உயிர்ம வேளாண்மை இடுபொருள்கள் உற்பத்தி செய்ய மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் இயற்கை இடுபொருள் தயாரித்தல் மையம் அமைப்பதற்காக ரூபாய் ஒரு இலட்சம் மானியமாக வழங்கப்பட்டது.



உயிர்ம வேளாண்மை இடுபொருள்கள் தயார் செய்ய பயிற்சி அளிக்கப்பட்டது. இத்திட்டதின் மூலம் அங்கக இடுபொருட்களான பஞ்சகாவ்யா, ஜீவாமிர்தம், மீன் அமினோ அமிலம், மண்புழு உரம் குழுவாக உற்பத்தி செய்து வருகிறோம். மண்புழு உரம் இரண்டு தொட்டிகள் கட்டப்பட்டு தற்போது வெற்றிகரமாக உற்பத்தி செய்து வருகிறோம்.

அரை ஏக்கர் பரப்பில் தென்னந்தோப்பிலும் வேளாண்மை முறையில் சாகுபடி செய்துள்ளேன். தற்போது கும்பப்பூ பருவத்தில் 1 ஏக்கரில் கொச்சி சம்பா ரகமும் 1 ஏக்கரில் கீரை சம்பா ரகமும் 15 சென்டில் அறுபதாம் குருவை ரகமும் உயிர்ம வேளாண்மை முறையிலே சாகுபடி செய்துள்ளேன். அங்கக இடுபொருள்களான பஞ்சகாவியம், மீன் அமினோ அமிலம், மண்புழு உரம் ஆகியவற்றை தயாரித்து பயன்படுத்துவதோடு பிற விவசாயிகளுக்கும் வழங்கி வருகிறேன். மேலும் சுற்றியுள்ள கிராம மக்களுக்கு இயற்கை விவசாய முறைகள் மற்றும் அதிக அளவு தரமான விளைபொருளை உற்பத்தி செய்வதற்கான வழிமுறைகளை கற்றுக் கொடுத்து வருகிறோம். மீன் அமிலம் மற்றும் பஞ்சகாவ்யா தயார் செய்யும் முறைகள் மற்றும் பயன்பாடுகள் பற்றி சக விவசாயிகளுக்கு பயிற்சிகள் வழங்குவதோடு மற்றும் இலவசமாகவும் உயிர்ம வேளாண்மை இடுபொருள்கள் வழங்கி உயிர்ம வேளாண்மையை ஊக்கப்படுத்தி வருகிறோம். இத்திட்டத்தினை செயல்படுத்திய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

**தொகுப்பு**
**பா.ஜாண் ஜெகத் பிரைட்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**கன்னியாகுமரி மாவட்டம்.**
**எஸ்.செல்வலெட் சுஷ்மா,**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி),**
**கன்னியாகுமரி மாவட்டம்.**

## வீராணம் ஏரியில் கரையோரங்களில் பொங்கும் நுரையால் அதிர்ச்சி: நீரின் தரத்தை ஆய்வு செய்ய கோரிக்கை

**கடலூர், மே.05–**

வீராணம் ஏரி தண்ணீரில் நுரை பொங்குவதால், ஏதேனும் ரசாயனம் கலந்துள்ளதா? என விவசாயிகள் அச்சமடைந்துள்ளனர். கடலூர் மாவட்டம் காட்டுமன்னார் கோவில் அருகே வீராணம் ஏரி அமைந்துள்ளது. சேத்தியாத்தோப்பு பூதங்குடியில் துவங்கும் ஏரி, லால்பேட்டை வரை 14 கி.மீ நீளம், 5 கி.மி அகலம் கொண்டது. தற்போது ஏரியின் நீர்மட்டம் 44 அடி உள்ளது. இந்த ஏரியின் மூலம் 54 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. சென்னை குடிநீருக்காக வினாடிக்கு 73 கன அடி தண்ணீர் செல்கிறது. கோடை காலம் தற்போது வாட்டி வதைத்து



வந்தாலும், வீராணம் ஏரியில் நீர் நிறைந்து இருப்பது அப்பகுதி கிராம மக்களுக்கும், விவசாயிகளுக்கும் மகிழ்ச்சியை அளித்து வருகிறது.

இருப்பினும் தற்போது ஏரியின் கரையோரங்களில் தண்ணீரில் நுரை பொங்கி காணப்படுகிறது. அவை பல இடங்களிலும் பரவி இருக்கிறது. ஏரி நீரில் ஏதேனும் ரசாயனம், அல்லது கழிவுகள் கலந்திரு க்கலாம் என இப்ப குதி விவசாயிகளும், கிராம மக்களும் அச்சமடைந்துள்ளனர். இதனால் ஏரியில் உள்ள தண்ணீரின் தரத்தை ஆய்வு செய்ய வேண்டும் என அப்பகுதி மக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வரும் நிலையில் அரசு அதி காரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதாகவும் குறிப்பிடுகின்றனர். கடந்த ஆண்டு வீராணம் ஏரிக்கு நீர்வரத்து வழியான வடவாறு வாய்க்காலில் வந்த நீர் பச்சை நிறமாக மாறியபோது சென்னை மாசுகட்டுப்பாடு துறை அதிகாரிகள் ஏரியில் தன்ணீரை எடுத்து ஆய்வு செய்தனர். அதேபோல் இப்போதும் ஆய்வு செய்ய வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.



■ சிவகங்கை மாவட்டம் சிவகங்கையில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வந்த சரவணபோஸ் பதவி உயர்வு பெற்று நேற்று காளையார் கோவிலில் காவல் ஆய்வாளராக பொறுப்பேற்றுக் கொண்டார். அவருக்கு மாலை தந்தி குழுமம் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்..

## பஹல்காம் தாக்குதலுக்கு பிறகு பலத்தை காட்டும் இந்திய கடற்படை

**புதுடெல்லி, மே.05–**

இந்தியா பாகிஸ்தான் பதற்றத்துக்கு இடையே இந்திய கடற்படை தனது பலத்தை காட்டி வருகிறது.

காஷ்மீரின் பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு பதிலடி கொடுக்க இந்தியா பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. சிந்து நதி நீர் பங்கீடு ஒப்பந்தத்தை நிறுத்தியது, வாகா எல்லையை முடியது, பாகிஸ்தானியர்கள் வெளியேற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பதிலடி கொடுக்கும் முடிவை எடுப்பதில் முப்படைகளுக்கும் முழு சுதந்திரம் அளித்து விட்டார் பிரதமர் மோடி. இதையடுத்து கடற்படை கப்பல்கள் அரபிக் கடல் பகுதியில் போர் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன. விமானப்படை விமானங்கள் நெடுஞ்சாலைகளை அவசர காலத்தில் பயன்படுத்துவதற்கான பயிற்சியை மேற்கொண்டு வருகின்றன.



இந்நிலையில் இந்திய கடற்படையின் ஊடக பிரிவு புதிய படம் ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் ஐஎன்எஸ் கொல்கத்தா போர்க்கப்பல், துருவ ரக ஹெலிகாப்டர், ஸ்கார்பின் ரக நீர்மூழ்கி கப்பல் ஆகியவை ஒன்றாக அணிவகுத்துள்ளன. (கடலிலும், கடலுக்கு மேலேயும், கடலுக்கு கீழேயும்) கடற்படையின் மூன்று சக்திகள் என அந்த படத்துக்கு தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இந்தப்படம் விரைவாகப் பரவியது.

கடற்படை கப்பல்கள் எல்லாம் போருக்கு தயார் நிலையல் இருக்கும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதை வெளிப்படுத்தும் வகையில் இந்திய கடற்படை இந்த படத்தை வெளியிட்டுள்ளது.

## கிருமி நீக்கம் செய்யப்படாத பச்சை முட்டையிலிருந்து தயாரிக்கப்படும் மையோனைஸ் தடை செய்யப்பட்டுள்ளது

கன்னியாகுமரி, மே.05-

கிருமி நீக்கம் செய்யப்படாத பச்சை முட்டையிலிருந்து தயாரிக்கப்படும் மையோனைஸானது தமிழ்நாடு அரசால் தடை செய்யப்பட்டுள்ளதால், உணவு வணிகர்கள் அதனை தயாரிக்கவோ, விற்பனை செய்யவோ கூடாது என்றும் அந்த வகையானன மையோனைஸை நுகர்வோர்களும் தவிர்த்து, கிருமி நீக்கம் செய்யப்பட்டு, பதப்படுத்தப்பட்ட முட்டையிலிருந்து தயாரிக்கப்பட்ட மையோனைஸ் அல்லது முட்டை கலக்காத சைவ மையோனைஸ் மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

கிருமி நீக்கம் செய்யப்படாத பச்சை முட்டையிலிருந்து மையோனைஸ் தயாரிக்கும்போது, பச்சை முட்டையில் இயல்பாகவே காணப்படும் சால்மோனெல்லா, என்டரிடிடீஸ், லிஸ்ட்டீரியா போன்ற பாக்டீரியா கிருமிக்கள் மையோனைஸிலும் சேர்ந்துவிடும் என்பதினால், அதனை சாப்பிடுபவர்களுக்கு வயிற்றுப்போக்கு, டைபாய்டு உள்ளிட்ட நோய்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் பொது மக்களின் பொது சுகாதார நலனில் அக்கறையுள்ள தமிழ்நாடு அரசு கிருமிநீக்கம் செய்யப்படாத பச்சை முட்டையிலிருந்து மையோனைஸை தயாரிப்பது, தயாரித்தவற்றை இருப்பு வைப்பது, போக்குவரத்து செய்வது, விநியோகம் செய்வது ஆகியவற்றை ஓராண்டிற்குத் தடை செய்து தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிட்டுள்ளது. இத்தடையாணையானது 08.04.2025 முதல் அமுலுக்கு வந்துள்ளது.

எனவே, உணவு வணிகர்கள் எவரும் கிருமிநீ;க்கம் செய்யப்படாத பச்சை முட்டையிலிருந்து மையோனைஸை தயாரிக்கவோ, அவ்வாறு தயாரித்த மையோனைஸை இருப்பு வைக்கவோ, போக்குவரத்து செய்யவோ, விநியோகம் அல்லது விற்பனை செய்யவோ கூடாது என்று அறிவுறுத்தப்படுகின்றார்கள். அரசு உத்திரவினை மீறி கிருமிநீக்கம் செய்யப்படாத பச்சை முட்டையிலிருந்து மையோனைஸை தயாரிப்பது, விற்பனை செய்வது உள்ளிட்ட, வணிக நடவடிக்கைகள் கண்டறியப்பட்டால், மேற்படி மையோனைஸானது பறிமுதல் செய்யப்பட்டு உணவு மாதிரி எடுத்து பகுப்பாய்வு செய்யப்பட்டு பகுப்பாய்வு அறிக்கையின் அடிப்படையில் தொடர் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்படுகின்றது. மேலும், உணவு பாதுகாப்பு துறையின் கள ஆய்வின் போதே கிருமி நீக்கம் செய்யப்படாத பச்சை முட்டையிலிருந்து மையோனைஸ் தயாரிக்கப்படுவது கண்டறியப்பட்டால் உரிய விசாரணைக்கு பின்னர் உணவு பாதுகாப்பு உரிமம் இடைநீக்கம் உள்ளிட்ட சட்டபூர்வ நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்படுகின்றது. மேலும், உடல் நலனை பேணிக்காக்க ஏதாவது நுகர்வோர்களும், தடை செய்யப்பட்டள்ள கிருமி நீக்கம் செய்யப்பட்டதா பச்சை முட்டையிலிருந்து தயாரிக்கப்பட்ட மையோனைஸை தவிர்க்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப் படுகின்றார்கள்.

எனினும், மையோனைஸை பிரியர்களுக்கு மாற்றுத்தேர்வாக கிருமி நீக்கம் செய்யப்பட்டு, பதப்பத்தப்பட்ட முட்டையிலிருந்து தயாரிக்கப்பட்ட மையோனைஸ் அல்லது முட்டை கலக்காத சைவ மையோனைஸ் சந்தையில் தொடர்ந்து கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அவற்றை தயாரிக்கவோ, விற்பனை செய்யவோ வணிகர்களுக்குத் தடையேதுமில்லை. கிருமி நீக்கம் செய்யப்பட்டு, பதப்படுத்தப்பட்ட முட்டையிலிருந்து தயாரிக்கப்பட்ட மையோனைஸ் அல்லது முட்டை கலக்காத சைவ மையோனைஸ் ஆகியவற்றை நுகர்வோர்கள் தத்தமது உடல் நிலைக்கு ஏற்றவாறு சரிவிகித உணவின் அளவிற்குள் சாப்பிடலாம். உணவு வணிகர்கள் மற்றும் நுகர்வோர்களின் வசதிக்காக கீழ்;க்கண்டவாறு தெளிவுரைகள் வழங்கப்படுகின்றது.

எது தடை செய்யப்பட்ட மையோனைஸ்? உணவக உரிமையாளர்கள் என்ன செய்ய வேண்டும்?

கிருமி நீக்கம் செய்யப்படாத பச்சை முட்டையிலிருந்து தயாரிக்கப்படும் மையோனைஸை தடை செய்யப்பட்டதாகும்.

உணவக உரிமையாளர்கள், தமது உணவகங்களில் கிருமி நீக்கம் செய்யப்படாத பச்சை முட்டையிலிருந்து மையோனைஸ் தயாரிக்ககூடாது

உணவக உரிமையாளர்கள் தமது நுகர்வோர்களுக்காக, உணவு பாதுகாப்பு உரிமம் பெற்று, தயாரிக்கப்பட்டு, பொட்டலமிடப்பட்டு, லேபிள் விபரங்களுடன் சந்தையில் கிடைக்கும் கிருமிநீக்கம் செய்யப்பட்டு, பதப்படுத்தப்பட்ட முட்டையிலிருந்து தயாரிக்கப்பட்ட மையோனைஸ் அல்லது முட்டை கலக்காத சைவ மையோனைஸ் பொட்டலங்களை மட்டுமே கொள்முதல் செய்து பயன்படுத்தலாம்.

எது அனுமதிக்கப்பட்ட மையோனைஸ்?

கிருமிநீக்கம் செய்யப்பட்டு, பதப்படுத்தப்பட்ட முட்டையிலிருந்து தயாரிக்கபட்பட்ட மையோனைஸ் அனுமதிக்கப் பட்டதாகும்.

முட்டை கலக்காத சைவ மையோனைஸ் அனுமதிக்கப் பட்டதாகும்.

இவை இரண்டும், பொட்டலமிடப்பட்டு, லேபிள் விபரங்களுடன் விற்பனை செய்யப்பட வேண்டும்.

அனுமதிக்கப்பட்ட மையோனைஸ் தயாரித்து விற்பனை செய்ய உணவு வணிகர்கள் என்ன செய்ய வேண்டும்?

கிருமிநீக்கம் செய்யப்பட்டு, பதப்படுத்தப்பட்ட முட்டையிலிருந்து தயாரிக்கப்படும் மையோனைஸ் அல்லது முட்டை கலக்காத சைவ மையோனைஸை “ சொந்த தயாரிப்பு உணவுப் பொருளாக” (Proprietary Food) உள்ளதால், அதனைத் தயாரித்து விற்பனை செய்ய, மத்திய உணவு பாதுகாப்பு உரிமத்தினை? http://foscos.fssai.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பித்து, ரூ. 7,500 கட்டணம் செலுத்தி பெற்ற பின்னரே தயாரித்து, உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் உட்ட விதிகளுக்குட்பட்டு விற்பனை செய்ய வேண்டும். தவறினால், மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 63ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்படும்.

நுகர்வோர் மையோனைஸ் குறித்து ஏதேனும் புகார் அளிக்க விரும்பினால், 94440 42322 என்ற உணவு பாதுகாப்பு துறையின் வாட்ஸ் அப் புகார் சேவை எண்ணிற்கோ அல்லது TNFSD App- மூலமாகவோ புகார் அளிக்கலாம். புகார் அளிப்பவரது ரகசியம் பாதுகாக்கப்படும். அதே வேளையில், உணவு வணிகர்கள் தடை செய்யப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட மையோனைஸ் குறித்து மேலும் தகவல் அறிய விரும்பினால், கன்னியாகுமரி மாவட்ட தமிழ்நாடு உணவு பாதுகாப்புத்துறை அலுவலகத்தை அணுகி, உரிய தகவல் பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா., இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளாகள்.



வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் நடைபெற்று வரும்

# பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு

விருதுநகர், மே.05-

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, அரசின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு அரசு திட்டப்பணிகள் மற்றும் நலத்திட்டங்களின் பயன்கள், கருத்துக்கள் குறித்து பயனாளிகளிடம் கலந்துரையாடினார்.

அதன்படி, வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், பேர்நாயக்கம்பட்டி ஊராட்சியில், கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ரூ.3.50 இலட்சம் மானியத்தில் வீடுகள் கட்டப்பட்டு வருவதையும் மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டு ஆய்வு செய்து, பயனாளிகளிடம் கலந்து ரையாடி கருத்துக்களை கேட்டறிந்தார்.

பின்னர், புலிப்பாறைப்பட்டி ஊராட்சியில், பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் ரூ.2.40 இலட்சம் மானியத்தில் குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டு வருவதையும், மேலும், திருவேங்கடப்புரம் ஊராட்சியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.7.50 இலட்சம் மதிப்பில்; கதிரடிக்கும் களம் அமைக்கப்பட்டுள்ளதையும், நதிக்குடி ஊராட்சியில், ரூ.34.23 இலட்சம் மதிப்பீட்டில், புதிதாக கட்டப்பட்டுள்ள பள்ளி வகுப்பறை கட்டடங்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது, அரசின் மூலம் அந்தந்த ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்ட பணிகள் மற்றும் நலத்திட்டங்கள் முறையாக மக்களை சென்றடைகிறதா என பொதுமக்கள் மற்றும் பயனாளிகளிடம் கலந்துரையாடி, அவர்களின் கருத்துக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் கேட்டறிந்தார். மேலும், நடைபெற்று வரும் பணிகளை விரைவாகவும், தரமான தாகவும் குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர சம்மந்த ப்பட்ட அரசு அலுவ லர்களை அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவிப் பொறியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் இருந்தனர்.

# ரூ.10 கோடி மதிப்பீட்டில் அல்லிக்குட்டை ஏரி புனரமைக்கப்பட்டதன் மூலம் ஏரியைச் சுற்றியுள்ள விவசாய உற்பத்தி பெருக்கத்திற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது

அல்லிக்குட்டை ஏரி மற்றும் அய்யந்திருமாளிகை அறிவுசார் மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி ஆய்வு செய்து தகவல்

சேலம், மே.05-

சேலம், அல்லிக்குட்டை ஏரி மற்றும் அய்யந் திருமாளிகை அறிவுசார் மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். இரா. பிருந்தாதேவி, நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த ஆய்விற்குப்பின், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

சேலம் மாநகராட்சியில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து தொடர்ந்து கண்காணித்து உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, நிலத்தடி நீரை மேம்படுத்தும் வகையில் ஏரி, குளம் உள்ளிட்ட நீர்நிலைகளை தூர்வாரி நீர்ப்பிடிப்பு திறனை அதிகரிக்கச் செய்யும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்தவகையில், சேலம் மாநகராட்சியில் அல்லிக்குட்டை ஏரி, போடிநாயக்கன்பட்டி ஏரி மற்றும் மூக்கனேரி ஆகிய நீர்நிலைகளில் ரூ. 52 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு அரசலால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்போது நடைபெற்று வருகிறது.



இன்றைய தினம் சேலம், அல்லிக்குட்டை ஏரி சுற்றுச்சூழல் மறு சீரமைப்பு செய்யப்பட்டதை நேரில் ஆய்வு மேற்கொள்ள ப்பட்டது.

அல்லிக்குட்டை ஏரியானது சேலம் மாநகராட்சி, அம்மாப்பேட்டை வார்டு அலுவலகப் பகுதியில் 23.65 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. அல்லிக்குட்டை ஏரியைப் புனரமைத்து அழகுபடுத்துவதற்கு உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியின் கீழ் ரூ.10 கோடி தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு சுற்றுச்சூழல் மறு சீரமைப்பு செய்யப்பட்டுள்ளது. அல்லிக்குட்டை ஏரியை புனரமைக்கப்பட்டதன் மூலம் ஏரியைச் சுற்றியுள்ள விவசாய நிலங்களின் மண், குடிநீர், நிலத்தடி நீர் மாசுபடுவது தடுக்கப்படுவதுடன் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி நிற்பதால் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து விவசாயத்திற்கான தண்ணீர் தேவையை பூர்த்தி செய்து, விவசாயம் உற்பத்தி பெருக்கத்திற்கு வழிவகை செய்யப் பட்டுள்ளது. அல்லிக்குட்டை ஏரியின் நீர் பரவல் பகுதி அதிகரிக்கப்பட்டதோடு மழைக் காலங்களில் அதிகளவில் வெளியேறும் உபரி நீர் தற்போது அமைக்கப்பட்டுவரும் கால்வாய் மூலம் திருமணிமுத்தாற்றில் கலக்கும் வண்ணம் செயல்படுத்தப்பட்டுள்ளது. அதே போன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சேலம், அய்யந்திரு மாளிகையில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட அறிவுசார் மையத்தினை கடந்த 05.01.2024 அன்று காணொலிக் காட்சியின் வாயிலாக திறந்து வைத்தார்கள். இம்மையத்தில் ஸ்மார்ட் வகுப்பறை, இணையதள வசதிகளுடன் கூடிய கணினி மையம், வாசிப்பு அறை, எல்.சி.டி தொலைக்காட்சி, புரொஜெக்டர் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. இதில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் பயன்பெறும் வகையில் 40,000க்கும் மேற்பட்ட புத்தகங்கள் இடம்பெற்றுள்ளன. இன்றைய தினம் அறிவுசார் மையத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அறிவுசார் மையத்தில் போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவ, மாணவிகளிடம் கலந்துரையாடி கூடுதலாக ஏதேனும் வசதிகளின் தேவை இருக்கிறதா என்பது குறித்தும் கேட்டறியப்பட்டது. மேலும், அறிவுசார் மைய வளாகத்தைத் தொடர்ந்து தூய்மையாகப் பராமரித்து வரவேண்டும் என தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். இரா.பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார். இந்த ஆய்வின்போது, சேலம் மாநகராட்சி ஆணையாளர் திரு.இளங்கோவன், மாநகர பொறியாளர் திரு.செல்வநாயகம், துணை மாநகர பொறியாளர் திரு.செந்தில்குமார், அஸ்தம்பட்டி மண்டல உதவி ஆணையர் திருமதி லட்சுமி, மாநகர செயற்பொறியாளர்கள் திரு.பழனிசாமி, திரு.செந்தில்குமார், உதவி செயற்பொறியாளர்கள் திரு.செந்தில்குமார், திருமதி.சுமதி, நெடுஞ்சாலைத்துறை உதவி செயற்பொறியாளர் திரு.தினேஷ் தேசையா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.




# கரிசல்குயில் கிருஷ்ணசாமி, நாறும்பூ நாதனுக்கு புகழஞ்சலி கூட்டம்

புதுக்கோட்டை, மே. 05-

பாடகர் கரிசல்குயில் கிஷ்ணசாமி, எழுத் தாளர் நாறும்பூ நாதன் ஆகியோரின் மறைவையொட்டி புதுக்கோட்டையில் ஞாயிற்றுக்கிழமை அவர்களுக்கு புகழஞ்சலி கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் புதுக்கோட்டை மாவட்டக்குழு சார்பில் நடைபெற்ற புகழஞ்சலி கூட்டத்திற்கு மாவட்டச் செயலளர் எம்.ஸ்டாலின் சரவணன் தலைமை வகித்தார். மார்க்சிஸ்ட் கம்யூனி ஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் எஸ்.சங்கர், தமுஎகச மாநில துணைத் தலைவர்கள் நா.முத்துநிலவன், ஆர்.நீலா, புதுக்கோட்டை தமிழ்ச் சங்கத் தலைவர் தங்கம்மூர்த்தி, தமுஎகச மாவட்டத் தலைவர் ராசி.பன்னீர்செல்வம் மற்றும் நிர்வாகிகள் சு.மதியழகன், ரமா. ராமநாதன், எஸ்.இளங்கோ, கஸ்தூர்ரெங்கன் உள்ளிட்டோர் புகழஞ்சலி உரை நிகழ்த்தினர். பாடகர்கள் கிடாக்குழி மாரிம்மாள், இரா. தனிக்கொடி, ரெ.வெள்ளைச்சாமி, முத்து முகமது, சுதந்திர குமார் உள்ளிட்டோர் இசை அஞ்சலி செலுத்தினர்.



# மே 4 ல் பிறந்தநாள் விழா கண்ட புனித தோமையார் மாலை ஒன்றிய கழகச் செயலாளர், ஜி.வெங்கடேசன்

கோவிலம்பாக்கம், மே.05-

மே 4 ல் பிறந்தநாள் விழா காணும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் புனித தோமையார் மலை தெற்கு ஒன்றிய செயலாளர், கோவிலம்பாக்கம். ஜி. வெங்கடேசன் தனது இல்லத்தில் பிறந்தநாள் விழாவை திமுக கழகத் தொண்டர்கள், பொதுமக்கள் வண்ண வண்ண சால்வை அணிவித்து தலை கிரீடம், ஆள் உயர மாலை அணிவித்து, கேக்குகளை வெட்டி மகிழ்ச்சியுடன் கொண்டாடி மகிழ்ந்தனர். பிறந்தநாள் விழாவில் அனைவருக்கும் சிக்கன் பிரியாணி அருள்சுவை விருந்து சிறப்பாக அளிக்கப்பட்டது. விழாவில் திமுக கட்சியினர் மற்றும் பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு வாழ்த்தி சென்றனர்.

# கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் செய்திக்குறிப்பு

கன்னியாகுமரி, மே.05-

கண்புரை நோயாளர்களுக்கான சிகிச்சை முறைகள் மிக வேகமாக முன்னேற்றமடைந்து கொண்டிருக்கிறது. முந்தைய காலங்களில் கையாண்ட கண்புரை அறுவை சிகிச்சை முறைகள் தற்போது செய்யப்படுவதில்லை. அதற்கு பதிலாக அதி நவீன முறையிலான மற்றும் பழைய முறையை விட மிகவும் மேம்படுத்தப்பட்ட "கண் லென்ஸ்" பொருத்தும் சிகிச்சையே கண்புரை நோயாளர்களுக்கு தற்போது செய்யப்பட்டு வருகிறது.

இம்முறையில் கண்புரை நோயாளரின் கண்களில் உள்ள பழுதுபட்ட லென்ஸ்களுக்கு பதிலாக புதிதான வேறொரு லென்ஸ் மிகவும் எளிதான முறையில் பொருத்தப்படுவதால் கண்புரை நோயாளிகளுக்கு பார்வையானது மிக தெளிவாகவும் மிக நேர்த்தியாகவும் கிடைக்கிறது. புதிய லென்ஸ் பொருத்தப்படுவதால் மிக நீண்ட நாட்கள் பார்வை தெளிவாக இருக்கிறது. மிக கனமான கண்ணாடி அணிய தேவையில்லை. மிக குறுகிய காலத்திலேயே (ஒரு வாரத்தில்) நமது இயல்பான பணிகளை செய்ய முடியும்.

மேலும் "கண்லென்ஸ்" பொருத்தும் சிகிச்சையின் முக்கியத்துவத்தை மக்கள் அறிந்து கொள்ளவும் அதன் முழுபயனையும் கண்புரை நோயாளர்கள் பெறுவதற்காக ஒவ்வொரு ஊராட்சிகளிலும் கீழ்கண்ட தேதிகளில் "கண்லென்ஸ்" பொருத்தும் முகாம் மூலம் நமது மாவட்டத்தில் உள்ள அனைத்து மக்களும் பயன்பெறும் வகையில் நடைபெற உள்ளது.

அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியத்தில் 05.05.2025 அன்று சத்துணவு மையம் கரும்பாட்டூர் மற்றும் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம், வடிவீஸ்வரத்திலும் வைத்து நடைபெற உள்ளது.

திருவட்டார் ஊராட்சி ஒன்றியத்தில் 09.05.2025 அன்று அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெற உள்ளது.

தக்கலை ஊராட்சி ஒன்றியத்தில் 09.05.2025 அன்று அரசு துணை சுகாதார நிலையம் மூலச்சலில் வைத்து நடைபெற உள்ளது.

மேல்புறம் ஊராட்சி ஒன்றியத்தில் 15.05.2025 அன்று சத்துணவு மையம் சீரோபாய்ண்ட் மற்றும் A.H.S மேல்நிலைப்பள்ளி, கல்லுப்பாலத்தில் வைத்து நடைபெற உள்ளது.

தோவாளை ஊராட்சி ஒன்றியத்தில் 16.05.2025 அன்று சத்துணவு மையம், இந்திரா நகர் வடக்கூர் மற்றும் சத்துணவு மையம், அனந்த பத்மநாபபுரத்திலும் வைத்து நடைபெற உள்ளது.

முஞ்சிறை ஊராட்சி ஒன்றியத்தில் 22.05.2025 அன்று அரசு துணை சுகாதார நிலையம் நடைக்காவு மற்றும் ஊராட்சி அலுவலகம், விளாத்துறை வைத்து நடைபெற உள்ளது.

இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் 26.05.2025 அன்று சத்துணவு மையம், புல்லுவிளை (இ) பொட்டல்விளை மற்றும் கலைஅரங்கம் தெங்கம்புதூரிலும் வைத்து நடைபெற உள்ளது.

கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்தில் 28.05.2025 அன்று அரசு துணை சுகாதார நிலையம் எள்ளுவிளையில் வைத்து நடைபெற உள்ளது.

குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியத்தில் 28.05.2025 அன்று அரசு மருத்துவமனை குளச்சல் மற்றும் 29.05.2025 அன்று சத்துணவு மையம், ஆரோக்கியபுரம் மற்றும் சத்துணவு மையம் ஆலன்;விளையிலும் வைத்து நடைபெற உள்ளது.

இந்த முகாம்களில் கலந்து கொள்ளும் அனைத்து கண்புரை நோயாளர்களையும் அரசு வாகனத்தில் அழைத்து வந்து இலவசமாக கண் லென்ஸ் பொருத்தும் சிகிச்சை மேற்கொள்ளப்படும்.

எனவே கண்புரை நோயாளர்கள் இவ்வறிய வாய்ப்பினை பயன்படுத்தி இந்த நவீன கண் லென்ஸ் பொருத்தும் சிகிச்சையை மேற்கொண்டு நமது கன்னியாகுமரி மாவட்டத்தில் கண்புரை நோயுற்றோர் அனைவரும் பார்வை அடைந்துள்ளனர் என்ற நிலையை ஏற்படுத்துமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் கேட்டுக்கொள்கிறார்கள்.

# விருதுநகர் மாவட்டம் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டிவரும் வரும் பயனாளிகளிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் திட்டத்தின் பயன் குறித்து கருத்துக்களை கேட்டறிந்து ஆய்வு

விருதுநகர், மே.05-

விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கான ஆணைகள் பெற்று வீடுகள் கட்டி வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்ற பயனாளிகளிடம் கலந்துரையாடினார்.

தமிழ்நாடு அரசு பல்வேறு தொலைநோக்கு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. கலைஞர் கனவு இல்லம் திட்டம் மக்களுக்கு சொந்த வீடற்ற நிலை எனும் சூழலை ஒழிக்க வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் மூலம் கிராமப்புறங்களில் வசிக்கும் தனிநபர்களுக்குப் பாதுகாப்பான, நிரந்தரமான கான்கிரீட் வீடுகளை அளிப்பதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுகிறது.



தமிழ்நாடு அரசு கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 2030க்குள் 8 இலட்சம் பேருக்கு வீடுகள் கட்ட வேண்டும் என்ற இலக்கோடு திட்டங்களை வகுத்து வருகிறது. அதன்படி, விருதுநகர் மாவட்டத்தில் 2025-26 ஆம் ஆண்டில் அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் 172 பயனாளிகளுக்கும், காரியாபட்டி ஊராட்சி ஒன்றியத்தில் 278 பயனாளிகளுக்கும், நரிக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் 220 பயனாளிகளுக்கும், இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் 159 பயனாளிகளுக்கும் சாத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் 127 பயனாளிகளுக்கும், சிவகாசி ஊராட்சி ஒன்றியத்தில் 217 பயனாளிகளுக்கும், திருவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் 95 பயனாளிகளுக்கும், திருச்சுழி ஊராட்சி ஒன்றியத்தில் 116 பயனாளிகளுக்கும், வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் 201 பயனாளிகளுக்கும், விருதுநகர் ஊராட்சி ஒன்றியத்தில் 267 பயனாளிகளுக்கும், வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியத்தில் 48 பயனாளிகளுக்கும் என மொத்தம் 1900 பயனாளிகளுக்கு பணி நியமன அணைகள் வழங்கப்பட்டு வீடு கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் ஏறத்தாழ 360 சதுர அடி பரப்பளவில் காங்கிரீட் வீடுகள் கட்டப்படுவதற்கு ஏறத்தாழ ரூ.3.50 இலட்சம் வழங்கப்படுகிறது. அதன்படி, காரியாபட்டி ஊராட்சி ஒன்றியம், சூரனூர் ஊராட்சி தேனூர் கிராமத்தில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ், வீடுகள் தலா ரூ.3.50 இலட்சம் மானியத்தில் வீடுகள் கட்டப்பட்டு வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்ட ஆய்வு செய்து, தங்களுக்கான வீடுகள் கட்டி வரும் பயனாளிகளிடம் இத்திட்டத்தின் பயன்கள் குறித்து கருத்துக்களை கேட்டறிந்தார்.



# கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலைக்கு படகுப் போக்குவரத்து தற்காலிகமாக ரத்து

**கன்னியாகுமரி, மே.05–**

கன்னியாகுமரியில் நிலையற்ற நீர் மட்டம் காரணமாக திருவள் ளுவர் சிலைக்கு படகுப் போக்குவரத்து தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே சென்ற சுற்றுலாப் பயணிகள் பாதுகாப்பாக கரைக்கு திரும்ப அனுப்பி வைக்கப் படுகின்றனர். விடுமுறை தினமான இன்று அதிகளவில் சுற்றுலாப் பயணிகள் குவிந்திருந்த நிலையில், படகுப் போக்கு வரத்து ரத்து செய்யப்பட்டதால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161